**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**EP No.112/2018**
**in**
**OS No.31/2006**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.11.2023 | தந்தை/கணவர் பெயர்: | முகமது கவுஸ் |
| பெயர்: | முகமது இப்ராஹீம் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | பரங்கிபேட்டை | சமயம்: | |
| சாதி: | | வயது : | 62 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 20.11.2023.**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மனுவிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

22.09.2017 அசல் வழக்கு எண்.31/2006–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 25.09.2018 தேதியில் நீதிப்போரணை மனு எண்.25203/2018–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் உண்மைநகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 21.02.2019–ல்

தமிழ்நாடு வக்பு வாரியம் என்னை முத்தவள்ளியாக நியமித்து அனுப்பிய கடிதம் மற்றும் தீர்மானத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 23.02.2021– தேதியிட்ட எனது தகப்பனாரின் இறப்பு சான்றின் இணைவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 11.04.2022 தேதியிட்ட தஞ்சாவூர் மண்டல வக்பு வாரிய மேற்பார்வையாளர் வழங்கிய சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.